# பெப்ரவரி - 04 - சனி

## இலங்கை மாதா திருநாள் - புனித அருளானந்தர்

"நீங்கள்தனிமையான இடத்திகுச் சென்று ஓய்வெடுங்கள்" எபி.6:31

---

### முதல் வாசகம்: ஏபிரேயர் 13:15-17, 20 - 21

சகோதர சகோதரிகளே!அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப்பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும்.நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை.உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் அவர்களுக்குப் பணிந்திருங்கள். அவர்கள் உங்களைப்பற்றிக் கணக்கு கொடுக்க வேண்டியிருப்பதால் உங்கள் நலனில் விழிப்பாயிருக்கிறார்கள். இப்பணி அவர்களுக்கு மகிழ்ச்சியுள்ளதாய் இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு மனத்துயர் தராதீர்கள். அவர்களுடைய துயரம் உங்களுக்கு நலம் பயக்காது. என்று முள்ள உடன்படிக்கையின் இரத்தத்தால், ஆடுகளின் பெரும் ஆயரான நம் ஆண்டவர் இயேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவர் அமைதியை அருளும் கடவுளே.அவர் தம் திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றும்படி, எல்லா நன்மையும் செய்வதற்கு உங்களை ஆயத்தப்படுத்தி இயேசு கிறிஸ்து வழியாகத் தமக்கு உகந்ததை நம்மில் செய்தருள்வாராக! இயேசு கிறிஸ்துவுக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

### நற்செய்தி: மாற்கு 6: 30 – 34

அக்காலத்தில் திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்துகூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. அவ்வாறே அவர்கள் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள்.அவர்கள் புறப்பட்டுப் போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டு, எல்லா நகர்களிலிருந்தும் கால்நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்குமுன் அங்கு வந்து சேர்ந்தனர்.அவர் கரையில் இறங்கிய போது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் இறைமகன் இயேசு எங்கள் மேல் கொண்ட பரிவின் நிமித்தம் பாவத்திலிருந்து மீட்டெடுக்க பலவிதமான சோதனைகள், வேதனைகள் அனுபவித்து இறுதியில் தனது உயிரையே கொடுத்தார். அதற்கு பரிகாரமாக சென்ற காலங்களில் நாங்கள் என்ன செய்தோம்? தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்றோம், இனிவருங்காலங்களில் என்ன செய்யப் போகின்றோம் என்பதை சிந்திக்க அழைத்து நிற்கின்றது. சென்ற காலங்களிலோ, தற்பொழுதும் கூட தீயசெயல்கள்,காம இச்சைகள், களியாட்டம் இவ்வாறானவை மூலமும் பொறுமையற்ற வாழ்க்கை வாழ்வதனாலும் அன்பின்றி, அமைதியின்றி வாழ்ந்து கொண்டி ருக்கின்றோம். அவ்வாறாக அல்லாமல் இனி வருங்காலங்களில் தாழ்ச்சியான மனநிலை கொண்டவர்களாக. பெரியவர்களுக்கு பணிந்து. மற்றவர்களை அன்பு செய்து வாழவேண்டும் (எபி.13:16). ஒரு ஆயன் தொலைந்து போன ஆட்டைத் தேடிக் கண்டு பிடித்து அதற்கு தேவையானயாவற்றையும் நிறைவேற்றி நேரியவழியில் வழிநடத்துகின்றாரே. அதே போன்று பாவங்களள் பலவீனத்தினால் அவரைவிட்டுப் பிரிந்து போனாலோ அல்லது துன்பவேளையில் தவித்துப் போனாலோ எம்மைத் தேடிக் கண்டுபிடித்து,எமது துன்பங்களை நீக்கி, ஆறுதல் தருபவராக இருக்கின்றார் இறைமகன் இயேசு. எனவே நாங்கள் அவர் எங்களைத் தேடியலைந்து திரியாமல் எமக்குப் புத்துயிர் கொடுத்து வழிநடத்தும் இயேசு எங்கே இருக்கின்றார் என்பதை நாங்கள் தேடிக் கண்டுபிடித்து அவரோடு கூட என்றும் இணைந்து வாழ எங்களைத் தயார் படுத்துவோம்.